# விலங்கு நண்பர்கள்:

# ஓராங்குட்டான்



## மனிதக் குரங்குகள் பற்றிக் அறிந்து கொள்வோம்:

**1.** ஓரங்குட்டான் குரங்கு வகையைச் சேர்ந்தவை. இவற்றுக்குக் குரங்குகளைப் போல வால் இருப்பதில்லை.

**2.** இவற்றுக்கு மரக்கிளைகளை இறுகப் பற்றிக்கொள்ள உதவும் நீண்ட விரல்களைக் கொண்ட பாதங்கள் உள்ளன.

**3.** இவற்றின் நீண்ட கைகால்கள் மரம் விட்டு மரம் தாவும் அளவுக்கு நீளமாக உள்ளன.

**4.** இவற்றின் குட்டிகள் ஏழு முதல் எட்டு ஆண்டுகள் வரை தமது தாயோடு தங்கியிருந்து தங்களின் பிழைப்பிற்குத் தேவையான திறன்களை விளையாட்டுகளின் மூலம் கற்றுக்கொள்கின்றன.

**5.** மலாய் மொழியில், 'ஓராங்' என்றால் மனிதன் மற்றும் 'குன்டான்' என்றால் காடு என்று பொருள். எனவே, 'ஓராங்குட்டான்' என்பது 'காட்டு மனிதன்' என்பதைக் குறிக்கிறது.

Wildlife Reserves Singapore Group

# எது ஓராங்குட்டானை மரம் ஏறுவதில் திறமைசாளியாக ஆக்குகிறது?

ஓராங்குட்டான் என்ற இந்த வகைக் குரங்குகள் போர்னியோ மற்றும் சுமத்ராவில் உள்ள மலைக்காடுகளில் காணப்படுகின்றன. இதுதான் மரத்தில் வாழும் மிகப்பெரிய விலங்காகும். இது பார்ப்பதற்கு மிகப் பெரியதாக இருந்தாலும் இது லாவகமாக மரம் விட்டு மரம் தாவும் ஆற்றல் உடையது.



# பார், நினை, சிந்தி கேள்விகள்

**‘பார்-நினை-சிந்தி’ என்ற உத்தியைப் பயன்படுத்தி உங்கள் குழந்தைகளுடன் ஓர் உரையாடலைத் தொடங்குங்கள். உங்கள் குழந்தைகள் தாமாகவே கேள்விகளை உருவாக்கச் செய்யுங்கள்!**

*Adapted from Project Zero, Harvard Graduate School of Education



## பார்:

- இந்தப் படத்தில் நீ காண்பனவற்றைக் கூறுக.
- இங்கு எத்தனை ஓராங்குட்டான்கள் உள்ளன?
- ...நான் பார்க்கிறேன்.

## நினை:

- இந்தக் குட்டி ஓராங்குட்டான் தன் கைகளைக் கொண்டு தன் தாயின் கழுத்தைச் சுற்றி என்ன செய்கிறது என நீ நினைக்கிறாய்?
- இந்த ஓராங்குட்டான்கள் மரங்களில் எவ்வாறு நகர்ந்து செல்கின்றன என்று நீ நினைக்கிறாய்?
- ...என நான் நினைக்கிறேன்.

## சிந்தி:

- இந்த ஓராங்குட்டான்கள் அடுத்து என்ன செய்யும் என நான் சிந்திக்கின்றேன்.
- ...எப்படி எனச் சிந்திக்கின்றேன்.
- ...எங்கு எனச் சிந்திக்கின்றேன்.

Wildlife Reserves Singapore Group

JURONG BIRD PARK · NIGHT SAFARI · River Safari · Singapore Zoo

# நடவடிக்கை 1
# இது கோணிச்சாக்கு அல்ல



குழு நடவடிக்கை

இந்தக் கோணிப்பைப் போல காட்சியளிக்கும் வேறு ஏதாவது ஒரு பொருள்

படி 1. காணொளியைக் காணவும். அதில் மெர்லின் என்ற ஓராங்குட்டான் கோணிப்பையைக் கொண்டு விளையாடுவதைக் கவனிக்கவும்.

தூண்டுதல் கேள்விகள்:

- மெர்லின் கோணிப்பையைக் கொண்டு என்ன செய்கிறது?
- இந்தக் கோணிப்பையை வேறு எதற்கெல்லாம்/எவ்வாறெல்லாம் பயன்படுத்தலாம்?

படி 2. கோணிப்பை அல்லது கோணிப்பை போன்ற ஒரு பொருளைக் கண்டுபிடிக்கவும். அதனை வேறு எவ்வாறெல்லாம் புதுமையாகப் பயன்படுத்தலாம் என யோசிக்கவும். உனது யோசனையை வார்த்தைகள் அல்லது செயல்களின் மூலம் விளக்கவும். எ-டு. இது கோணிப்பை அல்ல; இது ஒரு பை.

ஒரு படி மேலாக, சொற்களில் வாய்மொழியாக விடைகளைக் கூறவைக்காமல், செய்கைகளின் மூலம் வெளிப்படுத்தக் கூடிய 'செரேட்' எனப்படும் ஒரு விளையாட்டை விளையாடலாம்.

# நடவடிக்கை 2:
# கண்ணாடி விளையாட்டு

குழு நடவடிக்கை    உனது உடல்

**படி 1.** கீழே உள்ள 3 படங்களிலிருந்து உனக்குப் பிடித்த ஒன்றைத் தேர்ந்தெடு.

**படி 2.** உன் நண்பனிடம் அந்த ஓராங்குட்டானைப் போல பாவனை செய்து காட்டி நீ தேர்ந்தெடுத்துள்ள ஓராங்குட்டான் எது எனக் கண்டுபிடிக்கச் சொல்.







தூண்டுதல் கேள்விகள்:

- எதனால் அந்த ஓராங்குட்டானை உனக்குப் பிடித்துள்ளது?
- நீ அதனிடம் எவற்றையெல்லாம் கவனித்தாய்? ஓராங்குட்டானின் நிறம், அளவு, வடிவம் ஆகியவற்றை உன் நண்பனிடம் விவரித்துக் கூறு.
- அதன் உணர்வு எப்படி உள்ளது என நினைக்கிறாய்?
- அது என்ன நினைக்கிறது என நீ நினைக்கிறாய்?